# மெல்லநகும்



கு. றஜீபன்

# மெல்ல நகும்

# மெல்ல நகும்

கு. றஜீபன்

Mella Nagum

**(Poem)**

By

**K. Rajeeban@**

**First Edition:** sept-2017
Poovarashi : 104

Pages : 64
Price : 90/-

Printed & Published by
Printed by:
**Poovarashi Publications**
C-63,First Floor, First Main Road, Anna Nagar East,
Chennai-600 102. Ph : +919600131346
poovarashimedia@gmail.com,
www.poovarashi.com.

**சமர்ப்பணம்**

இ.முருகையன்
கல்வயல் வே.குமாரசாமி

# காந்தள் விழிகள்

அனிச்ச மலரில்
தெளித்த பனியாய்
இருக்கும் அணங்கே!
விடுகதைகள் போதுமடி
உந்தன் விழிகள்
கடுகளவும்
கலப்படமில்லாத
கவிதைகள் போல் உன்
காந்த விழிகளின்
நயனம் காண எந்தன்
இமை மடல்களைத்
தூதுவிட்டேன்

பாடல்கள் பதித்த
இசைத்தட்டுப் போல
ஆசைகள் நிறைந்த
என் இதயம்
இசைத் தட்டின் மீது
ஊசி வருடப்
பாடல் பிறக்கும்
பௌவியம் போல்
உந்தன்
ஊசிக் கண்கள்

இதயம் வருட
ஆசைக் கீதம்
அலைவரிசை ஏறியதடி

பிழையென அறிதலும்
சரியெனத் துணிதலும்
சுழையென அறியா
பேதையே!
ஆனாலும்
கண்டவர் உயிரை
உண்டிடும் விழிகள்
கொண்டணைந்ததேனோ?

உன்னை
மலரிதழ் என்று
மகுடம் சூட்டி
பெருமைகள் கொழிப்பது
பெண்மையே! என்றும்
நாணச்சிறைதனின்
நாயகி என்றும்
மோகத்தமிழால்
முழங்கியது கேட்டேன்
கானக்குயிலே! கற்பின் திருவே!
பெண்ணிவள் என்று
பெருமை பேசிட
சிறியன செய்தல் தகுமோ?

புவிதனில் உந்தன்
புகழினை விஞ்ச
இனியெதுவுமில்லை

அன்பில்
முளைவிடும் செடியே!
ஆசைநூலினில் கோத்த
காதலும் கொண்டு
உந்தன்
விழியினை நோக்கினேன்
அது எந்தன்
உயிரினைக் கொஞ்சம்
உண்டது கண்டு
துடுப்பென ஆகினேன்

மெல்லவள் என்று
மேதினி சொல்ல
வன்மைகள் தரும்
காரணம் யாதோ?
கண்டவர் உயிரை
கவர்ந்து கொள்ளும்
கள்ளவிழிகள் தானடி

பெண்ணவள் என்றும்
பேதை என்றும்
சில்லென உரைத்த
தமிழ் வார்த்தை அது
பொய்யெனப் போனதோ?

பொய்யாமொழிப்
புலவர்களெல்லாம்
கொய்யாத காய்
இதுதானோ?

ஒன்றுக்கொன்று
எதிரென நிற்கும்
பெண்மைத் தன்மை
இதுவாமோ?

காதல் கொண்டது நெஞ்சம்
காயம் தந்தது
கண்கள்
அணங்கு உறுத்தல்
படிதானோ? காதல்
படிதானோ?

விடுகதை போட்டு
விடையது காணும்
நிலையதுவாகும்
கவிதனில் கொழிக்கும்
இருபொருள் அர்த்தம்
அவளிடம் கண்டேன
அது
**"தெளிவினை நன்கு தெளித்தது"**

## நாணநகை

ஒற்றைச்செவ்வந்திப்
புன்சிரிப்புக்காரி!
என்னை படுத்தும் பாடு
அப்பப்பா!

அவள் அழகிற்கு
அழகிய நகைகள்
இரண்டு

வெருளும்
புள்ளி மான்களைப் போல்
அவள் கண்களிரண்டு
ஒருநகை.

பதமாகக் குழைத்த
பானையின் மண் போல்
இதமாகக் குழைந்த
நாணம்,
இனிப்புக் காரிகளுக்கே
உரித்தானதல்லவா?

என்
சித்திரப்பாவைக்கு
வழியும் நாணம்

வகையானதொரு
நகையல்லவா?

அன்னநடையாள்
சின்ன இடையாள்
எந்தன் உயிராள்
அணியும் நகையல்லவா!
எத்தனை உயர்வு

அவள்...
பெண்மையில் ஊறிய
நாணத்தை கண்ணிய நகையாய்
அணிந்தனளே அகத்தில்.

சொல்லிட முடியா
சுந்தரி அழகில் மின்னிடும்
கண்ணிமை கீழே
எனைக் கொன்றிடும்
விழிகள் இரண்டு
நகையென்று சொல்வதே
புறத்து.

ஒத்த
நகைகள் இரண்டு
அந்த
ஒயிலாளிடத்து
இருக்க
ஒவ்வா நகைகள்
எதற்கு?

அழகியல் நிறைந்த
அற்புதமே இரு

நகையணிந்த பக்குவமே!
நிலைபொருள்....
நகையெனஅணிந்தாய்
அறமும் பொருளும்
அவையிதுவாகும்
முறையில் அவையோ
முழுமை பெற்றால்
இன்பம் கூடும்
இனிதே - அதை
தந்திடும்
காதல் அமுதே!

உடையும்
நகைகள் எதற்கு?
உடையா
நகைகள் இருக்க
கடையில் கிடையா
நகையிரண்டு
உன்னில் இருக்கு
போதுமடி...

**"பிணை ஏர் மடநோக்கும்..."**

## களவுப் பார்வை

அடி! பெண்ணே!
காதலில்
முதல் சந்திப்பு...
பல
முன்னுரைகள் எழுதுகிறது.

இருப்பியல்வாத
தத்துவத்தின் மீது
தெளிக்கப்பட்ட
நடப்பியல்வாத
நளினங்கள்!

முதல் சந்திப்பிலேயே
தத்துவ விசேடங்களை
தரிசனங்களாகத் தருகிறது.

என்
எதிரே வந்த என்னுயிரே!
காமம்
எதிர் முனைகளின் ஈர்ப்பு

ஆண்பாதி பெண்பாதி
ஆழக்கடலில்
சமமாய் கடையும்
அமிர்தம்
காமம்.

சரிபாதி விகிதத்தில்
காமம் கடைந்தால்
அமிர்தம்.
சுரக்கும் என்பது
மன்மதக் கலையின்
மந்திர வார்த்தை.

ஆனால்,
அந்தப் பாவை
நாணிக் குழைந்து
தலை சாய்த்து
நான் பார்க்காத போது
களவுப் பார்வையில்
உரசும் தீக்குச்சி
சரிபாதி காமத்தை
விஞ்சியதே!

அவளின்
சிறுபொழுதுப் பார்வையில்
என் சிந்தை
கலங்கியதே

அந்த ஓரப்பார்வை
இத்தனை உசரமா...!?

அவள்
சூதாட்டச் சுந்தரி
காமத்தில்,
முக்கால் மேல்
திருடுகிறாளே!

இந்தப் பாவையும்
இவள் பார்வையும்
அப்பப்பா!
என் சொல்வேன்
ஓரப்பார்வையில்
இருக்கும் வேகம்
என்னை படுத்தும் பாடு
என்னே! சொல்வேன்.

சொக்கினேன்,சொக்கினேன்,
சுந்தரியாள்...
கண்

களவு செய்யும்
வேலை

அவள்
தனங்களைப் போல்
இத்தனை பெரிதா?

அவள் சிந்தும்
சிறுபார்வையில்
பெருங்காமங் கூட
சிக்கிவிட்டதே!
காமத்துக்கே
காமம் வந்ததோ?

அவளில்
எத்தனை அர்த்தங்கள்
எத்தனை சொப்பனங்கள்
வித்தகிதான்.
சரிபங்கு விடாமல்
பெரும் பங்கைக் கொண்டவள்.

**"கண்களவு கொள்ளும்..."**

## மொழிபேசும் விழிகள்

என்
இதயம் துளைத்த
இளவரசியே!
உன் விழிகள்
மட்டும்
என்னென்று புரியலையே!

நடனமாடும்
பெண்ணின் விழிகள்
நயங்கள் உரைக்கும்
பலவே...

ஆனால்
இவள் விழிகளோ...?

காதல்
மொழிபேசும்
அந்த விழிகளில்

காலன்
குடிகொண்டானோ?

நிறைந்த பூங்குழலி
என்னை
நிறைத்த போதும்
அவள் விழிகள்
இன்னமும் புரியவில்லை
அவை கூற்றுவனோ?

இல்லையில்லை
அவை
நர்த்தனம் புரியும்
நித்தியவிழிகளே!

வெண்மலரில்
கருவண்டு இருக்க
தென்றல்
தாலாட்டுவது போல்
அசையும்
அழகிய விழிகளோ?

இல்லை! இல்லை!
அவை
இளமை துள்ளும்
இனிய நாதமாய்
கனிவு துள்ளும்
கவரிமான்களோ?

புள்ளிவைத்த மான்களோ?
அவை
தேவலோகச் சொந்தமோ?
"கள்ளி" என்று
நான் சொல்வேன்
அவள் கள்ளத்தனம்
கண்டுதெளிவேன்.

எத்தனை தடவை
பார்த்தாலும்
பற்பல பொருளுணர்த்தும்
அந்த விழிகள்
நயனங்கள் காட்டும்
கண்களோ....?
இல்லை,
காதல் போர்த்திய
காலனோ?
இல்லை,
நெஞ்சை அள்ளிடும்
புள்ளி மான்களோ?

ஒன்றை நினைக்கின்
இன்னொன்று துளிர்க்கிறதே!
ஒற்றுமையில்லா
மூன்று பொருளை
ஒன்றென வைத்த
சுந்தர தேவியின்

மோகனப்பார்வை
காமனை அல்லவா
தட்டுது.

அந்த
பவள விழிகள்
பவித்திரமானவை.
காதலின் முன்னுரைக்கு
முத்தமொழிகள் இடுமுன்னே
தன்னிலக்கணம் காட்டிய
தாமரைகள்.

**"கூற்றமோ கண்ணோ...?"**

## காதல் போதை

காதல்
ஆசைகளின் அவஸ்த்தை
கலப்படமில்லாத
ரணங்களின் ராச்சியம்.

நிலவு கசியும்
போதை இராத்திரியில்
கனவு மலர
களித்திருக்கும் காதல்.

காதல்!
ஒரு போதை.
கனவு!
ஒரு போதை.
காமம்!
ஒரு போதை.

மலரின் மீது
தென்றலின் போதை
மொட்டைத் திறக்கிறது.

மொழியின் போதை
கவிஞன் கையில்
இலக்கியமாகிறது.

இரவின் போதை
காமக்களிப்பில்
கூடலாகிறது.

தாமரை இதழில்
வண்டின் போதை
மோகனம் பாடுகிறது.

வெள்ளைக்கள்ளின்
இனிய போதை
கள்ளக் கம்பன்
கவியில் நெளிகிறது.

போதை உண்டு
களித்திருந்தால்...
பாவை எண்ணம்
பாய் விரிக்கிறது.

உண்டால் போதை!
கண்டால் போதை!
தொட்டால் போதை!
கேட்டால் போதை!

போதை எங்கும்
புதைந்திருக்கு.
வாழும் வாழ்வில்
இனித்திருக்கு.

பார்க்கும் பார்வை
சரியென்றால்
சொன்ன போதை
சொக்கிட வைக்கும்.
சுந்தரப் பொழுதில்
அத்தர்வாசம்
அள்ளித்தெளிக்கும்.

காதல் போதை
பல்வகை உண்டு
பாடல் போல
பொருளிலும் உண்டு.

இயற்கை ரசிக்கும்
இலக்கியப் பார்வை
காதல் போதை
கண்டால் தெரியும்.

காயம் கூட
வலிகள் இன்றி
இரத்தம் கண்டும்
சிரிக்கும் பார்வை
காதல் போதை
கண்டால் தெரியும்

கற்பனை வானில்
சிறகினை அசைத்து
வானவில்லில்
வர்ணம் திருடி
ஓவியம் தீட்டும்
இன்பம்...
காதல் போதை
கண்டால் தெரியும்.

அழகை நோக்கி
அலங்கரித்து
அழகில் நாளும்
திளைக்கும் இன்பம்.
காதல் போதை
கண்டால் தெரியும்.

எதிலும் பார்வை
செலுத்திய போதும்
அதிலே எண்ணம்
லயித்திடும் இன்பம்.
ஆசைக்காதல்
கண்டால் தெரியும்.

வீசிய புன்னகை
பேசிடும் அர்த்தம்
ஆயிரம் பல்லவி
எழுதிடத் தோன்றும்

அத்தனை இன்பம்.

வந்தது எதனால்
அன்புக் காதல்
கண்ட போதே!

காதல், காமம்
இரு விழிகள்.
அன்றில் பறவை
அதன் நிலைகள்.
திணையில்
இரண்டு பொருளாக
உலகில்
இவை தாம்
உயர் போதை.

எத்தனை இன்பம்
வைத்தவன் இறைவன்
அத்தனை இன்பம்
சுவைத்தால் தெரியும்.

கள்ளின் போதை
உண்டால் தெரியும்
இதழின் போதை
சுவைத்தால் தெரியும்.

உண்டால் மயக்கும்
மதுவின் போதை

கண்டால் மயக்கும்
காதல் போதை.

இன்பக் காதலில்
உள்ள போதை
அந்தக்
கள்ளில் ஏது?

உண்ட பின்பே
மதுவின் மயக்கம்
கண்ட போதே
காதல் மயக்கம்.

கள்ளினை விஞ்சிய
காம மயக்கம்
சொல்லினில் அடங்கா
சுகந்த மயக்கம்.

**"உண்டார்கண் அல்லது..."**

## தென்றலின் சினேகிதி

பெண்மை
எழுத முடியாத
காவியம்.

பிரம்ம ரகசியத்தின்
சிருஷ்டி மூலமோ?

நித்தம்
பூத்துச் சிரிக்கின்ற
மல்லிகைப்பந்தல்.

மாணிக்கம் மீது
பனித்துளி மாதிரி,
பெண்மை
எப்பொழுதும்
குளிர்ந்திருக்கிறது.

பெண்மை
தென்றலின் சிநேகிதி
அதனால்தானோ
தென்றலை
தூதுவிடுகிறாள்!

அச்சம், மடம்,
நாணம், பயிர்ப்பு
செவ்வனே சேர்ந்து
சிந்தித்துப் படைத்த
சிருஷ்டிதான்
பெண்மை

தொட்டால் சுருங்கும்
தொட்டாற் சிணுங்கி போல்
பெண்மையும் நாணும்.

ஆகா!
என்ன அற்புதம்
எனது பார்வை
அவளை
வருடும் போது
நாணத்தால்
அந்த நதி
நாணி....!
தலை சாய்கிறது.

மலர்களே.....!
இரவல் வாங்கிய
பெண்ணின் மென்மை
மயக்கத்தையல்லவா
ஊட்டுகிறது.

ஆம்!
நான் பார்க்கும் போது
அவள்
பூமி பார்க்கும்
அற்புதம்
பெண்ணின்
கண்ணியமல்லவா?

எத்தனை
ஆற்றல் உள்ளவள்
இத்தனை அடக்கமா?

உயர்ந்தவர்
"பணிவு கொழல்" என்பதை
காதலியே!
உன்னில் கண்டேன்.

அடடே!
நான்
பார்க்கும் போது

என்னை
பார்க்காதவள்,

சற்றே!
என் பார்வை விலக
என்னையே
பார்வையால் செதுக்குகிறாள்,
மெல்லக் குழைந்து
சிரிக்கிறாள்.
அது!
அவள் அடைந்த
வெற்றியின் சிரிப்போ?

ஆகா...!
அவள் மனதில்
நான்
தொலைந்தது போல்
என் மனதில்
அவளும்
தொலைந்திருக்கிறாள்.

அந்நியன் என்றால்
சுட்டெரிக்கும் விழிகள்
என்
பார்வை பட்டும்
அழகிய

கவிதைகள் போல்
நாணுகிறாள்.

நிலம் நோக்கும்
அவள் விழிகள்
பின்
என்னை நோக்கி
மெல்ல நகும்.

**"யான் நோக்கும் காலை..."**

## விழிவீச்சு

என் காதலியின்
விழிவீச்சுக்கு
அஞ்சித்தானோ
புருவ வானவில்
வளைந்துகொண்டது

நீயெரிக்கும் விழிவெம்மை
தாங்காமலா
பயந்து புருவங்கள்
பிரிந்தன

அடடா!
அவள் விழிகளுக்கு
இத்தனை ஆற்றலா?
ஆனாலும்
அவை பிடிவாதம்தான்.

ஆம்! அவள்
பிரியாத நட்பினை

புரியாத பேதையல்லவா?

புருவமும் விழிகளும்
பேசிக்கொண்டு
மலரும் மணமுமாய்
இருந்திருந்தால்
இத்தனை துயரும்
கண்டிலனே!

ஐயோ!
இதென்ன கொடுமை
புருவங்கள்
வளைந்ததனால் தானே
வழுக்கித் தீயில் விழுந்தேன்

அவை
நட்போடு கைகுலுக்கி
நயமாக பேசியிருந்தால்
பாலோடுதேனாய்
பழமும் இனித்திருக்கும்

என்
காதல் தூதை
புருவத்தோழியிடம்
சொல்லாத குற்றமும்,
பூரண ஒளியாய்
புன்னகைக்கும்
விழித் தலைவியிடம்

நேரே
காதல் சொன்ன
குற்றமும் சேர்ந்தோ
இத்தனை சீற்றம்?

அடடா!
அறிந்திலனேயான்
அந்தோ!
விழிக் கணைகள்
விரைந்து தாக்குகிறதே!
நடுங்கும் நெஞ்சை
நிறுத்த முடியலையே!
புருவத்தோழியே!
நட்புப்பூண்டிலையோ?

நீ!
நட்போடு நேராக
நின்றிருந்தால்
என் நெஞ்சு இவ்வளவு
துன்பம் கொள்ளாதே!

எடுத்த பார்வை
தொடுத்த போது
தொலைந்து போனேன்.
விட்ட பாணம்
துளைத்த போது
எரிந்து போனேன்.
பாங்கி பேச்சை

கேட்டுச்சென்றால்
தலைவி
சம்மதம் தருவாளே!
அட!
வெந்த புண்ணில்தானே
வேதம்
புதிதாய் முளைக்கிறது!

**“கொடும்புருவம் கோடா...”**

# விழிகளில் எழுதும் கவிதை

சங்கீதம்
என் பல்லவிகளை
திருடிக்கொண்டது.
என் இதயமென்னும்
கருங்கல்லில்
இலக்கியச்சிற்பம்
வடித்தவளே!

காதலுக்கு
முன்னுரையான
விழிகள் பல
முத்துக்களையல்லவா
கோத்திருக்கிறது.

வார்த்தைகளற்ற
கவிதைகளால்
இதயம் கனத்திருக்கிறது.

அவள்
விழிகளில் எழுதும்
கவிதைகள் இன்னமும்
அசை பிரிக்கமுடியாத
மரபுகள்.
ஆம்! அவை!
மரபுக்கவிதைகள்.

நயனங்கள் சொல்லும்
அவள் விழிகள் பல
சொப்பனங்கள் திறக்கிறது.

அவள்
நாணிவைக்கும் அடியாய்
பூக்கும் விழிகள்
மெல்ல தேன் சிந்தின.
ஓ!
என்னைப் பார்க்கிறாள்.

அவள் பார்வையில்
எத்தனை இன்பம்
தொட்டாலே கசங்கிவிடும்
அந்தப் பார்வை
இப்போது
பட்டாலே இனிக்கிறதே!

சுகந்தமான பார்வையில்
இன்னும் மகரந்தங்கள்
துவட்டுமென்று
அவளைப் பார்த்தபோது....
நேரிழையாள்
நிலம் நோக்கினாள்

ஆகா...!
இது ஒன்று போதுமே!
இளைய பெண்மை
இனிக்கிறதே!

பெண்மை!
இங்குதான் பேசுகிறது.
கண்ணியம்!
இங்குதான் காட்சியாகிறது.

அவள்
மரபெனும் இளமைகள்
தலைசாயும்போது
தமிழே! தழைக்கிறது.

நாணித் தலைசாயும்
இமைகள்
பெண்மைக்குள்
வழுக்கி விழுகிறது.

அவள்
நிலம் நோக்கி
என் நெஞ்சில்
நீர் வார்க்கிறாள்.

அது நீரல்ல தீர்த்தம்.
காய்ந்துகிடந்த
நிலம் பெற்ற
தீர்த்த மழை.

இனி!
முளைவிடும்
காதல் ரோஜாக்கள்

**"நோக்கினாள் நோக்கி..."**

## கனி விழிகள்

அவள் பார்வையில்
எத்தனை விந்தை?

மொழியில்லாமலே
விழிகள் கதைக்கிறது.

நிகண்டு போல
அவள் பார்வை
நோக்கில்.....!
பல அர்த்தங்கள்.

எதிரியை
குறிவைக்கும்
துப்பாக்கி போலல்லாமல்
என்னை

குறிவைக்க
மனமில்லாத
இளம்பிறை.

மெல்லக் குழைந்து
விழிகள் கனிகளாகி
தேன் காதல்
தோய்ந்து

என்னை
கடைவிழியால்
காதல் பொங்கி
பார்த்திருக்கும்
பாவை
தனக்குள்ளேயே
காதல் தடாகத்தில்
இப்போது
நீந்தி மகிழ்கிறாள்.

அடிக்கடி என் மீது
துடிப்பைச் சீண்டி
மடிப்புக் காதலை
மறைக்கும்
இனித்த பெண்ணே!
என்னை விட்டு
நீமட்டும்
இன்பாலயம் காண்பது

தருமோ? சொல்லடி!

உன்
அரைக்கண் பார்வையில்
என்னை அலங்கரித்து
உனக்குள்ளேயே
திருவிழா காண்கிறாய்.
எனக்கு
எங்கேடி எச்சம்?

பறித்த பழத்தில்
பாதி உண்ணும்
இனிய சுகம்
கிடைக்குமா கண்ணே?

மெல்லப் பார்க்கும்
உன்
காதல் கண்களில்
வண்ணக் காதல்
பெருக்கி
உனக்குள்ளேயே
ஓவியம் கீறுகிறாயா?

பெண்களின்
காதல் மலர்வு
கண்களில் தெரிகிறது.

அவர்கள்
விழிகள் பேசும்
மொழிகளில்தான்
கவிதை கூட
தலை துவட்டுகிறது.

கூரிய பார்வையில்
வேலினை மிஞ்சிய
பெண்கள் பார்வை
மாலைகளாவது
காதலில்தானே!

**'குறிக்கொண்டு நோக்காமை..."**

## செவ்விள நீர்போல்...

அற்புதம்! அற்புதம்!
அவள்...
அழகிய லீலைகளை
வார்த்தைகளால்
உரைக்க முடியுமா?

அழகே! அழகு!
அந்த
வனிதையின் கொங்கை
நேராக நிமிர்ந்து சற்றே
வானையல்லவா பார்க்கிறது!

தூசுபடாத
பளிங்கு போன்ற
மாசுபடாத அவள்
கொங்கை அழகானது.

மூசிய இரு
செவ்விள நீர் போல்
பேசும் அவள்

கொங்கை படுத்தும்பாடு
ஏராளம்! ஏராளம்!

அடுக்கித் தொடுத்த
மலராய்
அவள்
அழகான கொங்கைகள்
என்னைக் கிறங்க
வைக்கின்றன.

சாயாத இளங்குருத்தாய்
காயாத
அவள் கொங்கை
என்னை சாயவைத்தது.

குளிர்ச்சியான தளிரும்
கவர்ச்சியான மொட்டும்
அந்தக் காரிகையின்
கொங்கைகள் போல்வன

அவை இன்னமும்
கீறல் விழாத
கண்ணாடிகள்.

அந்த
அழகிய கொங்கையை
வாரிப்பிடித்திருக்கிறது
வண்ணங்கள் தைத்த
சிற்றாடை.

நாணம் குழைந்த
பெண்மைக்கு
வீரம் நிறைந்த
கொங்கைகள்
தேரோட்டியின்
கொழுக்கி தீண்ட,
யானை அடங்குவது போல்
தலைவன் கைபட்டதும்
தன்னை மறக்கும்
கொங்கைகள்
தலைசாயும்
அழகு என்னே!

மதம் கொண்ட
ஆண் யானையின்
முகத்திலே போடும்
துணியாய்
மதமதவென நிறைந்த
கொங்கைகள் மீது
இவள்
கச்சுக்கட்டியிருக்கிறாள்.

அய்யோ! பாவம்!
அந்தச் சிற்றாடை
தாங்குமா?
புற்றில் இருந்து

பாயத்துடிக்கும்
முயல்களல்லவா அவைகள்.

துகிலால் மறைத்த
துடியிடைப் பெண்ணின்
இரு வெள்ளிமலைகள்
ஏனோ பட்டாடைக்குள்
போர்செய்கின்றன.
இதற்கு விடுதலை வழங்கும்
தலைவன் நானே!

அவள்
படர் முலைகள்
பவித்திரம் பேசுகின்றன

பெருமையும் வெண்மையும்
தாங்கும் கொங்கை
உச்சி கருமை கண்டது
காமன் பாணத்தினாலோ?

வழிந்து பரவும்
தேனடைத்தொங்கலாய்
அவள் தனங்களின்
சுவையும் இருக்குமோ?

நாணுடைப்பெண்மையின்
துடியிடைமேலே
சிற்றாடை கட்டிய இளம்
சிகரங்கள் இரண்டு
அப்பப்பா! என்னை
அஞ்சவைக்கின்றன!

**"கடாஅக் களிற்றின்மேல்.."**

## கனி விழிகள்

மதனமான அவள்
சுந்தர விழிகள்
பேசும் கவிதைகள்
எத்தனை!

பெண்ணின் விழிகளுக்கு
இத்தனை சக்தியா?

வாயால் மட்டுமே
பேசலாமென்று
எவன் சொன்னான்?
இங்கே!
விழிகளுமல்லவா பேசுகின்றன.

ஆகா! அற்புதம்!
பெண்ணின்
கனி விழிகளில்தான்
எத்தனை குழைவு.

பெண்ணின்
இமை மடல்களை
கண்டுதானோ
பூவிதழ்கள் அமைந்தன.

அதனிலும்
இவள் விழிகளை
எவ்வாறுரைப்பேன்.

என்
முன்னே வந்த
முந்திரிக் குலையே!
இன்னமும் மீட்டாத வீணையே!

உன்னை
தெவிட்டாத தேனென்று
தித்திக்கச் சொல்வேன்!

பாரடி! என்
பேதலித்த மனம்
உன்னை காதலிக்கிறது.

உந்தன் விழிகள்....
நான் வழுக்கி விழுந்த
பளிங்குத் தரையல்லவா.....?

என்னே விந்தையடி!
உன்
இலக்கிய விழிகளிரண்டும்
இரண்டு பார்வைகள்
இறைக்கிறது.

ஆனால்,
எத்தனை பெண்களை
கண்ட போதும்
இத்தனை அர்த்தம்
கண்டதில்லையே!

அப்போதெல்லாம்
வீழ்ந்திடாதவன்
உன்
விழிகளின் வீச்சில்
காதல் நதியில்
நான் பெற்ற
ஞானக் குளியலா
இத்தனை
அர்த்தங்கள் தந்தது?

கண்ணே!
உன் ஒரு பார்வை
காமத் தீக்கு
நெய்யல்லவா வார்க்கிறது?

என்
உடல் எரிக்கும்
காமத்தீ
உன் விழியிரண்டில்
ஒரு பார்வையல்லவா?

என்ன இது!
அந்தக் கயல்விழிகளா
காமத்தீயைக் கக்குவது.

புரிகிறது!
பிரம்மனின் படைப்பில்
அந்த தாமரைத் தடாகம்
ஒருவன் மட்டுமே
நீந்துவதற்கு.

ஆ! அதில்!
நான் வீழ்ந்து விட்டேன்
அதனால்தானோ
உரிமையோடு என்மீது
அந்தப் பார்வைகள்
பதிகின்றன.

பெண்ணிலக்கணம்
இங்கே பேசுகிறது.!

கொண்டவனை மட்டுமே
இரண்டு பார்வை பார்க்கும்
பெண்டகையாள்
அடுத்தவன் பார்த்தால்
கனல் பார்வை
ஒன்றினாலே
சாம்பலாக்கும் கற்பு
தமிழுக்கான முடிவல்லவா?

ஒருபார்வை
ஊடலாகவும்,
இன்னொரு பார்வை
கூடலாகவும்,
காதல் செய்யும்

அவள் பார்வை
இலக்கியமானது.

இலக்கிய மரபில்
இனித்த பார்வை...
ஊடலில் கண்ட காயம்
கூடலில் நீங்கும்.

என்மீது அவள்
பார்வை இரண்டு
ஒரு பார்வையாலே
காமத்தீயில் குளிக்கவைக்கிறாள்.

எங்கே?
உன் இன்னொரு பார்வை
ஆகா!
என் ரணங்களை வருடும்
இந்தப் பார்வை இனிக்கிறது.

முந்தானை நெகிழ
முன்னிரண்டு
அழகைக் காணும்
சுகம் போல

அவள்
இன்னொரு பார்வை
இருக்கிறது.

உயிரே....!
உன் பார்வை இரண்டும்
தமிழ் போல இனிக்கிறது.

இலக்கணம் இலக்கியம்
இணைந்த
தமிழ்ச் சுவைபோல
உன் பார்வை இரண்டில்
ஒரு பார்வை இலக்கணமும்
இன்னொரு பார்வை
இலக்கியமும் சொல்கிறது.

இலக்கண இலக்கியம்
பொழியும் இதமே!
உன் விழிகளை
தமிழ் என்றும்
அழைக்கலாமோ?

கண்ணே!
நீ தந்த காயம்
உன்னாலே ஆறுமடி,
ஒரு பார்வையாலே
காமத்தீயில் வீழ்த்தி
இன்னொரு பார்வையாலே
அந்த நோய்க்கு
மருந்து தடவும்
மாயமும் என்னே!

பெண்ணே!
இலக்கியம் சுவைக்கும்
இனிமையாக உனது
இன்னொரு பார்வை
இருக்குதடி!

மலரை மெல்ல வருடும்
தென்றல் போல் உன்
இரண்டாம் பார்வை
என் காயங்களை ஆற்றுகிறது.
உன்னில் இத்தனை சக்தி
வந்ததேதடி?

என்னை
மன்னவன் என்று
ஏற்றதனாலே
மருந்திடும் மான் விழிகள்

அடி! கண்ணே!
ஒரு பார்வை
நோயும் தந்து
இன்னொரு பார்வை
மருந்தும் கொடுப்பதில்
உனக்கு இணை ஏதடி!

இலக்கணம் பதமாகி
இலக்கிய விதைதூவி
நீர் தெளித்து முத்து
முளைகள் காணும்
உலகம்,தமிழ்,பெண்
எனும் மூன்றும்
கண்ணென
போற்றல் வேண்டும்

**"இருநோக்கு இவள்உன்கண்..."**

## சாதகப்பட்சி

என்ன இது!
இவள் விழிகள் தான்
ஈட்டியாய் தாக்குதென்றால்
வார்த்தைகளுமா?

என்னை
யாரென்று கேட்கிறாளே!
என்னடா இது!
இவள் என்னை
அறியாத பாவையா?
தெரியாதவள் போல
கேட்கின்றாளே!

வானவில்லுக்கே
வர்ணம் கொடுத்த
நங்கையே!
உனக்கு
இத்தனை கர்வமா?

"பனிபோல் உருகும்
பெண்ணவள்" என்று
பாட்டிசைத்த
புலவர்கள் எல்லாம்
முட்டாள்களானார்களா?

"அன்பு குழைப்பாள்
பெண்" என்று
வம்பு செய்த
புலவன் எங்கே?

இவள்!
அன்பில்லாதவள் போல்
என்னில் சீறுகிறாளே!

நிறம் மாறும் மீன்
இவள்தானா?

வழக்காறுகளோடே
இவள்
வாழ்ந்துகொண்டிருக்கிறாள்.

சம்பிரதாய
வார்த்தைகளையே
உண்ணும் சாதகப்பட்சி!

மரபுத்திரைகளுக்குள்ளேயே
கூவும்
மங்களக்குயில்!

இவள்
பேச்சு எரிந்தாலும்
உள்ளம் குளிர்ச்சியாய்தான்
இருக்கும்.

என்றாவது ஒருநாள்
என்மீது பூக்களை
சொரியத்தான் போகிறாள்.
அதுவரைக்கும் காத்திருப்பேன்.

கசப்பில் உடையும்
வார்த்தைகளல்ல என்
கயல் விழியாள்
வார்த்தைகள்.

அவள்
பெண்மையைத் தாங்கும்
பெருந்தலைவி

கண்ணியம் காக்க
கனலை
வைத்திருக்கிறாள்.

பெண்மை!
வரம்புகளே வாழ்க்கையான
வசந்தங்கள்.

சந்திரன் வரவிற்காய்
காத்திருக்கும் அல்லிகள்.

சூரிய சித்தாந்தங்களாய்
என்றுமே சுடர்விடும்
குத்துவிளக்குகள்.

வரம்பு சுட்டாலும்
வயலுக்குள்
ஈரம் இருக்கும்.

இவளது
காய்ந்த வார்த்தைகள்
கல்லெறிந்தாலும்
உள்ளே!
ஈரப் பாத்தியில்
நல்ல விதை
இட்டிருக்கிறாள்.

**"உறாஅதவர் போல் சொலினும்...."**



அனிச்ச மலரில்

பனித்த பனியாய்

இருக்கும் அணங்கே!

விடுகதைகள் போடுமுன்

விழிகள்

கண்டவர் உயிரை உண்டிடுமே!

பூவரசி வெளியீடு